# பத்திரிக்கைச் செய்தி

தென்காசி மாவட்டத்தில் பள்ளிகளில் செயல்படும் சத்துணவு மையங்களில் காலியாக உள்ள **138 சமையல் உதவியாளர்** பணியிடங்கள் நேரடியாக நியமனம் செய்யப்படவுள்ளன. வட்டாரம் வாரியாக நேரடி நியமனம் செய்யப்படவுள்ள சமையல் உதவியாளர் பணியிடங்களின் எண்ணிக்கை அந்தந்த வட்டார அலுவலகங்களில் இனசுழற்சி வாரியாக தகவல் பலகையில் ஒட்டப்படும்.

**ஊதிய விபரம்**

சத்துணவு மையங்களில் சமையல் உதவியாளர்களாக பணி நியமனம் செய்யப்படுவோருக்கு, மாதமொன்றுக்கு ரூ.3000/- தொகுப்பூதியமும், ஓராண்டு கால பணிக்குப்பின்பு சிறப்பு காலமுறை ஊதியத்தில் (ஊதிய நிலை 1 (Level of Pay – ரூ.3000 – 9000)) ஊதியம் வழங்கப்படும்.

**கல்வி தகுதி**

- பத்தாம் வகுப்பு தேர்ச்சி/தோல்வி

**வயது தகுதி**

மேற்காணும் பணியிடங்கள் நிரப்பும் பொருட்டு அரசாணை (நிலை) எண்.163, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி-2) துறை, நாள்.18.08.2010-இல் தெரிவிக்கப்பட்ட வயது தகுதி விபரம் பின்வருமாறு

| இனம் | வயது |
|---|---|
| பொதுப் பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் | அறிவிப்பு நாளில் 21 வயது பூர்த்தி அடைந்தும் 40 வயதுக்கு மிகாதாவராகவும் இருக்க வேண்டும் |
| பழங்குடியினர் | அறிவிப்பு நாளில் 18 வயது பூர்த்தி அடைந்தும் 40 வயதுக்கு மிகாதாவராகவும் இருக்க வேண்டும். |
| விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டோர் | அறிவிப்பு நாளில் 20 வயது பூர்த்தி அடைந்தும் 40 வயதுக்கு மிகாதாவராகவும் இருக்க வேண்டும். |

வயது நிர்ணயம் மற்றும் இதர தகுதிகளின் நிர்ணயம் அறிவிப்பு தேதியினை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும்.

நியமனம் கோரும் மையத்திற்கும் விண்ணப்பதாரரின் குடியிருப்பிற்கும் இடைப்பட்ட தூரம் 3 கி.மீ-க்குள் இருக்க வேண்டும் (ஊராட்சி – குக்கிராமம் –வருவாய் கிராமம் போன்றவைகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.)

விண்ணப்பதாரர் மாற்றுத்திறனாளியாக இருப்பின் உரிய அடையாள அட்டையுடன் விண்ணப்பிக்க தெரிவிக்கப்படுகிறது.

காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கும் போது உரிய விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய / நகராட்சி அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் மட்டும் விண்ணப்பிக்க இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. **விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள்: 25.04.2025**

25.04.2025 **பிற்பகல் 5.45** மணிக்குப் பிறகு வரப்பெறும் விண்ணப்பங்கள் பெறப்பட மாட்டாது. அஞ்சல் துறையின் மூலம் விண்ணப்பங்கள் அனுப்பப்படும் போது ஏற்படும் கால தாமதங்களுக்கு துறை பொறுப்பேற்காது என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.

**விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்களின் நகல்கள்**

1. பள்ளி மாற்றுச்சான்றிதழ்
2. SSLC மதிப்பெண் சான்றிதழ்
3. குடும்ப அட்டை
4. இருப்பிடச்சான்று,
5. ஆதார் அட்டை
6. சாதிச்சான்று
7. விதவை, கணவரால் கைவிடப்பட்டோர் மற்றும் ஆதரவற்ற பெண்கள் சான்றிதழ்
8. மாற்றுத் திறனாளிகள் அதற்கான சான்றிதழ்

போன்றவற்றின் நகல்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். உரிய சான்றிதழ்கள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகத் தேர்வின்போது அசல் சான்றிதழ்களுடன் கலந்து கொள்ள வேண்டும்.

மேலும் விண்ணப்ப படிவத்தினை https://tenkasi.nic.in/ என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

காரணம் ஏதும் குறிப்பிடாமல் நியமன அறிவிப்பு அறிக்கையினை இரத்து செய்வதற்கு / திரும்ப பெறுவதற்கு / திருத்துவதற்கு / கெடு தேதியினை நீட்டிப்பதற்கு மாவட்ட ஆட்சியருக்கு முழு அதிகாரமுண்டு.

**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**தென்காசி.**